**ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்**
**வினா விடை நேரம்.**
**வினா எண் 310.**
**தலைப்பு:வேற்றுமையில் ஒற்றுமை**
**மார்ச் 9, 2024**

*நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 35-40லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி*

கேள்வி:ஸ்வாமி இன்று உலகம் முழுதும் பேதங்களாலும் வேற்றுமைகளாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.நிற வேற்றுமை, பொருளாதார வேற்றுமை, இன வேற்றுமை, மொழி வேற்றுமை என்றும் அதனால் சண்டைகள் சச்சரவுகள் மற்றும் போர் என்று நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

இவ்வாறு சண்டையிட்டு கொண்டிருக்கிற இன்றைய உலகத்திற்கு தங்களின் மேலான அறிவுரைகளை வழங்க வேண்டும் ஸ்வாமி

ஸ்வாமி யின் பதில்:
இன்றைய உலகில் தங்களை அறிவாளிகள் என்று சொல்லி கொள்பவர்கள் குதர்க புத்தியுடன் ஒற்றுமையிலும் வேற்றுமையை தேடுபவர்களாக இருக்கிறார்கள்.

ஒரு சில நல்லவர்கள் மட்டுமே வேற்றுமையில் ஊடுருவியுள்ள நல்ல ஒற்றுமைகளை எடுத்து சொல்லி நல்லிணக்கம் பேணுகிறார்கள்.

மானவா என்பவன் தன் நடத்தையில் ஒரு தானவா போல் அதாவது மனிதன் ஒரு அரக்கனை போல் நடந்து கொள்கிறான்.

இன்றைக்கு நாம் வன்முறை மேலோங்கி இருக்கின்ற அசுர மற்றும் விலங்கு குணங்களையே மனிதர்களிடம் அதிகமாக பார்கின்றோம்.

மனிதன் வேற்றுமையாக தோன்றுபவைகளின் உள்ளே இருக்கின்ற ஒற்றுமைகளை புரிந்து கொண்டு நடக்க ஆரம்பித்து விட்டால் அந்த நிமிடமே இங்கே அமைதி சாந்தி மகிழ்ச்சி அனைத்தும் திரும்ப வந்து விடும்.

உதிரம் என்பது உலகிலுள்ள மனிதர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியாகத்தானே உள்ளது.மனிதர்கள் அனைவரும் கடவுளால் பொதுவாக வைக்கப்பட்ட ஒரே பிராணவாயுவைதானே சுவாசிக்கிறார்கள்.

பெரிய விருந்தினர் விடுதியில் அறு சுவை உணவு உண்ணுகின்ற பணக்காரனுக்கும் கிடைக்கிற கஞ்சியை குடிக்கின்ற பிச்சைகாரனுக்கும் பசி என்பது ஒரே மாதிரியான உணர்வு தானே.அது போல் தாகம் என்பது குளிர் பானம் அருந்துகின்ற செல்வந்தனுக்கும் தெரு குழாயில் நீரை பிடித்து குடிக்கின்ற ஏழைக்கும் ஒன்று தானே.

இருவருமே இன்பம் துன்பம் இரண்டையுமே அனுபவிக்கத்தானே செய்கிறார்கள்

மனித உடல் மண் நீர் நெருப்பு  காற்று ஆகாசம் என்ற  ஐம்பெரும் சக்திகளால் ஆனது.
ஜடமான உடலுக்குள் நீங்கள் காற்றை சுவாசித்து உள்ளே அனுப்புகிறீர்கள்
உடலுக்குள் அக்னியும் இருக்கிறது.அது உடலை வெது வெதுப்பாக வைப்பதுடன் உணவை ஜீரணிக்கவும் செய்கிறது.உடலின் உள்ளே காலி இடம் (ஆகாசம்)இருப்பதால் பல உறுப்புகளும் செயல் படுகின்றன.

உடலில் போதுமான அளவுக்கு நீரும் இருக்கிறது.ஆக வெளியே உள்ள  இந்த ஐம்பெரும் சக்திகள் உடலுக்கு உள்ளேயும் உள்ளன.ஒவ்வொருவரிடத்திலும் இது சரிவிகிதத்தில் உள்ளது.உங்களிடம் உள்ளது போலவே மற்றவர்களிடத்தும் உள்ளது.
அப்படி இருக்கும் போது நீங்கள் ஏன் மற்றவர்களை சார்ந்து இருக்கின்றீர்கள்உங்களிடம் இல்லாத எந்த சக்தி மற்றவரிடத்தில் உள்ளது.

இதுவே வேற்றுமையில் ஒற்றுமை என்ற சித்தாந்தத்தின் அடிப்படை தத்துவமாகும்.
இதுவே ஏகாத்ம பாவம் என்ற அனுபவமாகும்.

பந்தம் பாசம் மற்றவர்களை வேறாக பாவிப்பது என்பது இரட்டைதன்மை கொண்டதாகும்.

பூக்கள் பலவிதமாக இருந்தாலும் அற்றை கொண்டு செய்யபடும் இறை வழிபாடு ஒன்று தான்.

பசுக்கள் பலவாக இருந்தாலும் அவை தருகின்ற பால் ஒரேமாதிரியானதுதான்.
ஆபரணங்கள் பலவாக இருந்தாலும் அவை உண்டாக்கப்படும் தங்கம் ஒன்று தான்.
ஆன்மீக மார்கங்கள் வேறாக இருந்தாலும் அடைய போகின்ற ஆன்மீக  இலக்கு ஒன்று தான்.

நட்சத்திரங்கள் பலவாக இருந்தாலும் அவற்றிற்கு இடம் தந்து தாங்கி நிற்கின்ற ஆகாசம் ஒன்று தான்.

உயிரினங்கள் பலவாக இருந்தாலும் அவை சுவாசிக்கின்ற மூச்சு காற்று ஒன்று தான்.
நாமங்களும் ரூபங்களும் பலவாக இருந்தாலும் கடவுள் ஒருவர் தான்.
இதுவே ஒற்றுமையை உணர்தலாகும்.

நூலிழைகள் பலவாக இருந்தாலும் அதை கொண்டு நெய்யபடுகின்ற ஆடை ஒன்றேயாகும்.

இவ்வாறாக நீங்கள் ஒற்றுமை உணர்வை வளர்த்துக் கொண்டால் தான் உங்களால் தெய்வீகத்தை அனுபவிக்க முடியும்.

மதத்தின் பெயரால் மனிதர்கள் சண்டையிட்டு கொள்வது வெட்கப்பட வேண்டிய விஷயமாகும்.

எந்த மதமும் பொய் சொல்லலலாம் என்றோ அடுத்தவர்களுக்கு தீங்கு செய்யலாம் என்றோ பிடிக்காதவர்களை கொலை செய்யலாம் என்றோ போதிக்கவில்லை.

எல்லா மதங்களுமே அன்பு சத்யம் தியாகம் சகோதரத்துவம் இவைகளையே கடைப்பிடிக்குமாறு போதிக்கின்றன.

உங்கள் மனதில் உண்மையும் நன்மையும் இருக்குமானால் மதம் எப்படி தீயதாக இருக்கும்.

இந்த உலகத்தில் ஒரே ஒரு மதம்தான் உள்ளது.
அதுவே அன்பு மதமாகும்.
மொழி மற்றும் இனத்தின் அடிப்படையில் பாகு படுத்தி பார்பது குறுகிய மனப்பான்மையாகும்.

இந்த உலகத்தில் ஒரே ஒரு மொழி மட்டுமே உள்ளது

அது அடி மனதில் உள்ள அன்பின் வெளிப்பாடாக அமைகின்ற இதய மொழியாகும்.
அது போல் ஜாதியை சொல்லி பாகுபடுத்துவது மிகவும் கீழ்த்தரமான செயலாகும்.நீங்கள் பிறக்கும் போது என்ன ஜாதி என்ற பெயர் பலகையை தாங்கி கொண்டா பிறந்தீர்கள்.
இந்த உலகத்தில் ஒரே ஒரு ஜாதிதான் உள்ளது.அது மனித நேயம் மட்டுமே.

பல கடவுள்கள் இருப்பதாக நினைத்து கொண்டு பல்வேறு கடவுளர்களின் பெயர்களில் சண்டையிட்டு கொண்டிருக்கிறேர்களே.

உங்களுக்கு புரியவில்லையா பரம்பொருளாகிய இறை சக்தி ஒன்று மட்டுமே தான்.இரண்டாவாதக எதுவுமே இல்லாத அந்த ஒன்று மட்டுமே கடவுள் ஆவார்.கடவுளே ஒருவரே.அவர் பலர் அல்ல.அவரை நீங்கள் பல பெயர்களை சொல்லி அழைக்கலாம்.
ஆனால் கடவுள் ஒருவரே.அவர் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருளே ஆவார்.

சத்யம் என்பது எப்போதும் ஒன்றுதான்.ஆனால் பண்டிதர்கள் அதை பலவாறாக விளக்குகிறார்கள்.தெய்வீகமும் ஒன்று தான்.

தூய இதயத்துடன் ஆன்மீக பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலமாக வேற்றுமை இல்லாத ஒற்றுமையையும் அதன் மூலமாக தெய்வீகத்தையும் அனுபவிக்கலாம்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி அடிப்படையில் சிருஷ்டி அனைத்தும் இறைவனே என்ற போதும் எங்களால் ஏன் அதை உணர முடிவதில்லை.ஏன் வேற்றுமை பார்க்கும் தன்மையிலிருந்து எங்களாலும் விடுபட முடிவதில்லை.

ஸ்வாமி யின் பதில்:
இது இயற்கையின் விதியாகும்.இரண்டு வேறு வேறான படைப்புகள் முற்றிலும் ஒரே மாதிரியாக இருக்காது.ஏனென்றால் எண்ணம் சொல் செயல் இவையெல்லாம் காலத்தையும் சூழ்நிலையையும் பொருத்தே அமைகின்றன.

முழுவதும் பழுத்த பழம் தானே இனிக்கிறது.பிஞ்சாக இருக்கும் போதும் காயாக இருக்கும் போதும் அது இனிப்பதில்லையே. துவர்க்கிறதே.

இந்த இனிப்பு ஆரம்பத்திலேயே கிடைப்பதில்லை
பழத்திற்குள் யாரும் வெளியிலிருந்து இனிப்பை சேர்பதில்ல.காலத்தின் நகர்வினால் கிடைக்கின்ற பக்குவமே காயை இனிய பழமாக மாற்றுகின்றது.

மனித வாழ்க்கை யும் மூன்று முக்கியமான அங்கங்களை கொண்டதாகும்.
உடல் செயல்புரிவது-மனம் சங்கல்பிப்பது-ஆத்மா அனைத்திற்கும் சாட்சியாக எப்போதும் இருப்பது.

நீங்கள் ஒரு போதும் குறுகிய மனப்பான்மையுடன் இருக்க கூடாது.பரந்த மனப்பான்மையை வளர்த்து கொள்ள வேண்டும்.

கல்லூரி தேர்விலே என்னுடன் மற்ற நண்பர்களும் தேர்ச்சி அடைய வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் நீங்கள் ரிஸல்ட்டை பார்த்தால் நிச்சயம் உங்கள் பெயர் இருக்கும்.

ஆனால் நீங்கள் உங்கள் ரிஸல்ட்டில் மட்டும் ஆர்வம் கொண்டவராக இருந்தால் அது குறுகிய மனப்பான்மையாகும்.

அதை போலவே ஒரு குழுவாக நீங்கள் புகைபடம் எடுத்து கொள்ளும் போது அனைவரின் போட்டோவும் நன்றாக வர வேண்டும் என எண்ணினால் அது பரந்த மனப்பான்மையாகும்.

மனிதர்கள் பொதுவாக மூன்று குணங்களால் ஆனவர்கள்.

ஆனால் ஆன்மீகத்தில் மனிதர்கள் சத் சித் ஆனந்தமானவர்கள்.

உதாரணமாக இங்கே சர்கரையும் நீரும் இருக்கிறது.அது இரண்டையும் ஒன்றாக கரைக்கும் போது அது சர்கரை கரைசலாகிவிடுகிறது.இங்கே நீர் என்பது சத்.சர்கரை என்பது சித் சர்கரை கரைசல் என்பதே ஆனந்தமாகும்.

நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் முக்கியமான ஆன்மீக விஷயங்களை புரிந்து கொள்ள முயற்சிப்போம்.